செ.வெ.எண்: 62/ஆகஸ்ட் தேதி : 29.08.2019

**தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், தீர்த்தமலை உள்வட்டம் எஸ்.தாதம்பட்டி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் 155 பயனாளிகளுக்கு ரூ.25 இலட்சத்து 64 ஆயிரத்து 316 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.**

தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், தீர்த்தமலை உள்வட்டம் எஸ்.தாதம்பட்டி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் 155 பயனாளிகளுக்கு ரூ.25 இலட்சத்து 64 ஆயிரத்து 316 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இஆப., அவர்கள் வழங்கினார். அரூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.வே.சம்பத்குமார் அவர்கள் முன்னிலை வகித்தார். இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது.

இப்பகுதியில் வசிக்கும் ஏழை, எளிய கிராமத்தைச் சார்ந்த பொதுமக்கள் குறைகளை தீர்ப்பதற்கும் அவர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குவதற்கும் இதுபோன்ற மக்கள் தொடர்புத்திட்ட முகாம் நடத்தப்படுகிறது. தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணியாற்றும் அரசின் பல்வேறு துறைகளைச் சார்ந்த மாவட்ட முதன்மை அலுவலர்கள் தருமபுரியிலிருந்து 110 கி.மீ தொலைவிற்கு வருகை தந்து அரசின் திட்டங்கள் குறித்து பொது மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் திட்ட விளக்கவுரை ஆற்றியுள்ளார்கள். மக்கள் தொடர்பு திட்ட முகாமில் வருவாய்த்துறை, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, கால்நடைத்துறை, வேளாண்மை பொறியியல் துறை, மக்கள் நல்வாழ்வுத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் உள்ளிட்ட பல துறைகளின் சார்பில் பொது மக்கள் அரசின் திட்டங்களை அறிந்து கொள்ளும் வகையில் கண்காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் கிராமப்புறங்களில் உள்ள மக்கள் நெருங்கிய உறவுகளில் திருமணம் செய்துகொள்வதால் அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகள் மாற்றுத்திறனாளி குழந்தைகளாக பிறக்கின்றனர். பெண் குழந்தைகளுக்கு இளம் வயது திருமணங்கள் செய்து வைப்பதால் அவர்கள் பல்வேறு பாதிப்புகளுக்கு உள்ளாகின்றனர். எனவே, பெண்களுக்கு 18 வயது நிறைவடைந்த பின்பும், ஆண்களுக்கு 21 வயது நிறைவடைந்த பின்புமே திருமணம் செய்ய வேண்டும். அங்கன்வாடி மையங்கள் மூலம் வளர் இளம் பெண்களுக்கும், கர்ப்பிணி தாய்மார்களுக்கு இணை உணவு சிறப்பாக வழங்கப்பட்டு வருகிறது. இந்த இணை உணவு இரும்புச்சத்தை அதிகரிக்க உதவும். கிராமப்புறங்களில் உள்ள மக்கள் அனைவரும் கட்டாயம் கழிப்பறைகளை பயன்படுத்த வேண்டும். திறந்தவெளியில் மலம் கழிப்பதால் பல்வேறு நோய்கள் பரவுகிறது. தூய்மை பாரதத் திட்டத்தின் மூலம் தனிநபர் கழிப்பறைகள் கட்டிகொடுக்கப்பட்டு வருகிறது. தனிநபர் கழிப்பறையை கட்டினால் மட்டும்போதாது அதைத் தொடர்ந்து சிறப்பாக பராமரித்து பயன்படுத்தி வரவேண்டும். டெங்கு காய்ச்சல் பரவாமல் ஆரோக்கியத்துடன் வாழ மாவட்டத்திலுள்ள தாய்மார்கள் மற்றும் பொது மக்கள் அனைவரும் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும்.

மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் செயல்படுத்திய மத்திய அரசின் கிஷான் திட்டத்தில் ரூ.1.84 இலட்சம் விவசாயிகளுக்கு ரூ.6,000 வழங்கப்படுகிறது. இத்திட்டத்தில் பயன்பெறுபவர்கள் கிஷான் கிரிட் கார்டு பெற்று ATM-ல் பணம்

பெறலாம். முதலமைச்சரின் சிறப்பு மக்கள் குறை தீர்க்கும் கூட்டத்தில் தருமபுரி மாவட்டத்தில் 28.08.2019 அன்று வரை சுமார் 41,000 மனுக்கள் பெறப்பட்டுள்ளது. இம்மனுக்கள் மீது ஒரு மாத காலத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி,இ.ஆ.ப., அவர்கள் பேசினார்.

முன்னதாக சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 47 பயனாளிகளுக்கு ரூ.17 இலட்சத்து 36 ஆயிரத்து 500 மதிப்பிலும், உட்பிரிவு பட்டா 15 பயனாளிகளுக்கும், குடும்ப அட்டை 15 பயனாளிகளுக்கு ரூ.82 ஆயிரத்து 500 மதிப்பிலும், வேளாண்மைத்துறையின் சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.5 இலட்சத்து 24 ஆயிரத்து 323 மதிப்பிலும், தோட்டக்கலைத்துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.2 இலட்சத்து 20 ஆயிரத்து 993 மதிப்பிலும் 71 நபர்களுக்கு மலையாளி சாதி சான்றிதழ் என மொத்தம் 155 பயனாளிகளுக்கு ரூ.25 இலட்சத்து 64 ஆயிரத்து 316 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இம்முகாமில் வருவாய் கோட்டாட்சியர் திரு.புண்ணியகோட்டி, மகளிர் திட்ட அலுவலர் திருமதி.ஆர்த்தி, உதவி இயக்குநர் (நில அளவை) திரு.இராஜேந்திர பிரசாத் சின்ஹா, தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) திரு.வெங்கராமன், கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் மரு.வேடியப்பன், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலர் திருமதி.நாகலட்சுமி, ஆதி திராவிடர் நல அலுவலர் திரு.கோவிந்தன், பழங்குடியினர் நல அலுவலர் திரு.சரவணன், வேளாண்மை பொறியியல் துறை செயற் பொறியாளர் திரு.ஜெயக்குமார், வட்டாட்சியர் திரு. செல்வகுமார். உள்ளிட்ட அரசுத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு :- செய்திமக்கள் தொடர்புஅலுவலர்,தருமபுரி.**